திரு. ஆ. வெள்ளைச்சாமி : கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்துகிற சாயச் சாலைகளில் தனியார் சாயச் சாலைகளைவிட அதிக சாயக் கூலி இருப்பதால், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கச் சாயச் சாலைகளில்தான் சாயம் போட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால் அவர்களுடைய ப்ரொடக்ஷன் காஸ்ட் அதிகமாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது நவீன சாயத் தொழிற்சாலை. நவீனப்படுத்துகிறபோது இந்தக் குறைபாடுகள் இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

(2) தகவல் கோரல்.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழாசிரியர் கோரிக்கை பற்றி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. க. சுப்பு : ஏற்கனவே நான், இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 தமிழாசிரியர்களை பணிக்குத் திரும்பவும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கைபற்றி நான் 57-வது விதியில் ஒரு நோட்டீஸ் கொடுத்தேன் ; 42வது விதியிலும் ஒரு நோட்டீஸ் பெண்டிங் ஆக இருக்கிறது. இதற்கிடையே சாதகமான ஒரு முடிவை அரசு எடுத்து அது பத்திரிகையில் வந்திருக்கிறது. சட்டமன்றத்தில் சொல்லாமல் பத்திரிகையில் வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருப்பார்களானால் அவர்களுடைய உண்ணாவிரதம் கூட நீடித்திருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 82ன் கீழாவது ஒரு ஸ்டேட்மெண்டை அளிக்க முன்வருவார்களா ?

1978 மார்ச் 7]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தப் பிரச்சினை மேற் சபையில் கிளப்பப்பட்டபோது அப்போதே சொல்லியிருக்கிறேன். அங்கு சொன்னதுகூட எல்லோருக்கும் சேரும் என்று தயவு செய்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: நேற்றைய தினம் இரு அவைகளைப் பற்றியும் ஒரு விவாதம் நடந்தது. மேல்சபையில் சொன்னது இந்தச் சபைக்குச் சொன்னதாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று அமைச்சர் சொல்வது பொருத்தந்தானா? தங்கள் தீர்ப்பு தேவை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஒரு ரிக்வஸ்ட் ஆகப் பண்ணினேன். அவ்வளவுதான்.

திரு. க. சுப்பு: பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது 42-வது விதியின் கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது; 57-வது விதியின்கீழ் போன செஷனின்போதே நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றித் தெளிவாக அறிக்கை வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பிறகு நான் அதை வைக்கிறேன்.

திரு. க. சுப்பு: மேலவையில் அறிவிக்கப்பட்டு விட்டது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் இன்னும் அவர்களுக்கு டைம் கொடுக்க வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அறிக்கை வைக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேல் அந்தப் பிரச்சினை பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அங்கே பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னேன். முடிவு எடுத்து இப்போது வந்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். விவரம் என்னிடத்தில் இல்லாததால் அதை வைக்கிறேன் என்று கூறுகிறேன்.